**திருநெல்வேலி மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) அவர்களின்**
**செயல்முறை ஆணை**
**பிறப்பிப்பவர்: திரு.ந.ருக்மணி,**

**ந.க.எண்.ஙு3/1950590/2024**

**நாள்: 19.07.2025**

பொருள்: பணியமைப்பு - ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகு - திருநெல்வேலி மாவட்டம் - தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் - ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு தொகுதி - IV-ல் 2018-2019 மற்றும் 2019-2020-ம் ஆண்டுக்கு இளநிலை உதவியாளர் / ஊர்நல அலுவலர் நிலை 2 / காசாளர் நிலையில் பணிநியமனம் செய்யப்பட்டது - காளீஸ்வரி (திருமதி).ஆர்., - இளநிலை உதவியாளர் - பணிவரன்முறை செய்து ஆணையிடல்.

பார்வை

1. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை அவர்களின் ந.க.எண்.2418/PSD-I/2020 நாள்:26.05.2020.
2. இவ்வலுவலக செயல்முறை ஆணை ந.க.எண்: ஙு3/7827/2019 நாள்:13.08.2020.
3. தூத்துக்குடி மாவட்ட ஆட்சியரின் கடித எண்.D.Dis.Aw2/2858729/2025 – e(895656) நாள்: 21.04.2025
4. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய துணைச்செயலாளர் கடித ந.க.எண்: 2418/PSD -c1/2020 நாள்:08.07.2025

-------

**ஆணை:**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் 2018-2019 மற்றும் 2019-2020-ம் ஆண்டுக்கு நடத்தப்பட்ட ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு தொகுதி IVல் அடங்கிய இளநிலை உதவியாளர் பணிக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் போட்டி தேர்வின் மூலம் இளநிலை உதவியாளர்களாக தேர்வு செய்யப்பட்டு, பார்வை (1)-ல் காணும் கடிதத்தின்படி திருநெல்வேலி மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட திருமதி.ஆர்.காளீஸ்வரி என்பவரின் சாதிச்சான்றின் மெய்த்தன்மை அறிக்கை பெற்று பணிவரன்முறை செய்திட தெரிவிக்கப்பட்டுள்ளது. தனியருக்கு பார்வை(2)-ன்படி, திருநெல்வேலி மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகில் பணிநியமனம் வழங்கப்பட்டு, 20.08.2020 முற்பகல் இளநிலை உதவியாளராகப் பணியேற்பு செய்துள்ளார்.

மேலும், தனியரின் சாதிச்சான்றின் மெய்த்தன்மை அறிக்கை கோரப்பட்டதை தொடர்ந்து பார்வை (3)-ன்படி, சாதிச்சான்று மெய்த்தன்மை வாய்ந்தது என அறிக்கை வரப்பெற்றுள்ளது. மேலும், பார்வை (4)-ல் காணும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய துணைச்செயலாளரின் கடிதத்தில் திருமதி.ஆர்.காளீஸ்வரி என்பவருக்கு வழங்கப்பட்ட சாதிச்சான்றிதழ் (ST – Hindu - Kattunayakan) மெய்த்தன்மை வாய்ந்தது என பார்வை(3)-ல் காணும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதால் அத்தெரிவாளரின் விண்ணப்பம் இறுதி செய்யப்பட்டுள்ளது எனவும் பிற தகுதிகள் சரியாக இருப்பின் தனியரது பணியினை இளநிலை உதவியாளர் பதவியில் சேர்ந்த நாள் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்க தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, திருமதி . ஆர் . காளீஸ்வரி என்பவர் , திருநெல்வேலி மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகில் இளநிலை உதவியாளராக பணியேற்பு செய்த நாளான 20.08.2020 முற்பகல் முதல் தனியரின் பணியினை கீழ்க்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு இளநிலை உதவியாளர் / ஊர்நல அலுவலர் நிலை-2 / காசாளர் நிலையில் பணிவரன்முறை செய்து இதன்வழி ஆணையிடப்படுகிறது.

நிபந்தனை:

"The regularisation is subject to the outcome of the WPs pending on the files of the Hon'ble High court of Madras / Madurai Bench of the Hon'ble High court of Madras relating to the recruitment to the post included in Combined Civil Services Examination – IV for the year 2018-2019 and 2019-2020"

பணிவரன்முறை செய்யப்பட்ட விவரம் தனியரின் பணிப் பதிவேட்டில் பதிவுகள் செய்யப்பட்டது எனச் சான்றளிக்கப்படுகிறது.

மாவட்ட ஆட்சியரின்
நேர்முக உதவியாளர் (வளர்ச்சி),
திருநெல்வேலி.

19.7.23

பெறுநர்:
திருமதி.ஆர்.காளீஸ்வரி,
இளநிலை உதவியாளர்,
உதவி இயக்குநர் (தணிக்கை) அலுவலகம்,
திருநெல்வேலி.
(உரிய வழியாக)

நகல் :

1. ஆணையர்,
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம்,
சென்னை-15 - பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
2. செயலர்,
தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம்,
சென்னை-3- பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
3. துணைச் செயலாளர்,
தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம்,
சென்னை-3- பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
4. உதவி இயக்குநர் (தணிக்கை),
திருநெல்வேலி
5. ங3 பிரிவு இருப்பு கோப்பு.